# சட்டமன்றத்தொகுதி-களஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளர் **அன்பில் மகேஷ் பொய்யாமொழி** அறிவிப்பின்படி, திருச்சி தெற்கு மாவட்டத்தில் தொகுதி வாரியாக சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் குழுவினர் கழக சட்டத்துறை செயலாளர் **இரா.கிரிராஜன்** எம்.பி., மாணவர் அணி துணை செயலாளர் **அப்துல் மாலிக்** ஆகியோர் அடங்கிய கள ஆய்வுக்குழுவினர். திருச்சிராப்பள்ளி தெற்கு மாவட்டத்தில் உள்ள சட்டமன்ற தொகுதிகளில், தொகுதி வாரியாக கீழ்க்கண்ட பட்டியல் உள்ளவாறு ஆய்வு மேற்கொள்ள உள்ளனர்.

| வ.எண் | தேதி | சட்டமன்ற தொகுதி | கள ஆய்வு நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1. | 25/05/2026 | திருவெறும்பூர் | மாவட்ட அலுவலகம் |
| 2. | 26/05/2026 | திருச்சி கிழக்கு | மாவட்ட அலுவலகம் |
| 3. | 27/05/2026 | மணப்பாறை | ஆர்மோன்ஸ் மஹால், மணப்பாறை |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 20.5.2026

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# சென்னை, திருத்தணியில் 104 டிகிரி வெயில்!

*சென்னை, மே.22-*

தமிழ்நாட்டின் 11 இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட்டை தாண்டி வெப்பநிலை பதிவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் நேற்று முன்தினம் (மே 20) தெரிவித்துள்ளது.

இதில், அதிகபட்சமாக சென்னை விமான நிலையம் மற்றும் திருத்தணியில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவானதாகக் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: மே 24 ஆம் தேதி வரை தமிழ்நாடு, புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றத்திற்கான வாய்ப்பு குறைவு.

எனினும், வட கடலோரத்தில் ஒரிரு இடங்களில் சற்று உயரக்கூடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலையில் இயல்பை ஒட்டியே இருக்கக்கூடும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

நேற்று (20-05-2026) மற்றும் நேற்று முன்தினம் (21-05-2026): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்பட்டது. நகரின் ஒருசில பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

அதிகபட்ச வெப்பநிலை 39-40° செல்சியஸை (102 - 104 ஃபாரன்ஹீட்) ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 29° செல்சியஸை ஒட்டியும் இருக்கக் கூடும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகம் முழுவதும் பதிவான வெப்பநிலை அளவு குறித்தும் வானிலை ஆய்வு மையம் புள்ளி விவரங் களுடன் குறிப்பிட்டுள்ளது.

**11 இடங்களில் சதமடித்த வெய்யில்**

புதன்கிழமையான நேற்று முன்தினம் (மே 20) அதிகபட்சமாக சென்னை விமான நிலையம், திருத்தணியில் 104 டிகிரி ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியுள்ளது. இதற்கு அடுத்தபடியாக சென்னை நுங்கம்பாக்கம் 102.38, வேலூர் 101.66, மதுரை 100.4, பரங்கிப்பேட்டை 99.68, புதுவை 99.68, கடலூர் 98.96, திருப்பத்தூர் 98.78, தருமபுரி 98.78, நாகை 98.6 ஃபாரன்ஹீட் வெப்பம் பதிவாகியுள்ளது.



சைதாப்பேட்டை பணிமனை தொ.மு.ச நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் ஆலோசனை கூட்டம் சங்கத்தின் பொதுச் செயலாளர் பெரம்பூர் த.ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் கழக தொழிலாளர் அணி செயலாளர் பிடிசி ஜி.செல்வராஜ் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாளை முன்னிட்டு ஆலோசனை வழங்கினார். பொருளாளர் எம்.பெருமாள், ஆர்.கந்தன், எம்.சங்கர், வி.எகண்ணன், எ.அனில்குமார்,ஜி.சங்கரன்,எஸ்.சாந்தகுமார்,எ.சுரேஷ், எ.ராஜாரவிவர்மா, டி.வெங்கடேசன், ஜி.ஜெயவேல், எ.சுரேஷ், த.சுரேஷ்,ஜே.சரவணன், எம்.அருள்ஜோதி, எம்.தண்டபாணி உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# தி.மு.கவின் மீதான உளவியல் யுத்தம்!

**மனுஷ்ய புத்திரன்**
மாநில ஆலோசகர்,
தி.மு.க தகவல் தொழில் நுட்ப அணி



**தி**.மு.க. கடந்த சட்டமன்றத் தேர்தலில் அடைந்த தோல்விக்கான காரணங்களை கழக நிர்வாகிகளிடமிருந்தே கேட்டு அறியும் மாபெரும் முன்னெடுப்பை கழகத் தலைவர் அவர்கள் மிகுந்த வெளிப்படைத் தன்மையுடன் மேற்கொண்டிருக்கிறார். தி.மு.க. விமர்சனங்கள் வழியே வளர்ந்த இயக்கம். அதில் சுய விமர்சனங்களும் அடங்கும்.

ஆனால் தி.மு.க. தனது தோல்வியை ஏற்று சுயபரிசீலனையில் ஈடுபட்டிருக்கும் வேளையிலும்கூட தி.மு.க.வின் மீதான தாக்குதல்களை இணைய மாஃபியாக்கள் நிறுத்தவில்லை. இன்னும் சொல்லப்போனால் தேர்தலுக்கு முன்பு இருந்ததைவிட இந்தத் தாக்குதல்கள் குரூரமாக மாறியிருக்கின்றன. தி.மு.க.வின் தோல்விக்கான சில எதார்த்தமான காரணங்கள் சிலரால் சொல்லப்பட்டாலும் பெரும்பாலும் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி இந்த இயக்கத்தை முற்றாக அழித்துவிடவேண்டும் என்கிற வெறியோடு தி.மு.க.வின் பரம்பரை எதிரிகளும் புதிய எதிரிகளும் மிகைப்படுத்தபட்ட, பொய்யான காரணிகளை புனைந்துகூறி வருகிறார்கள். இது திசை திருப்புகிற வேலை மட்டுமல்ல, தி.மு.க.வின்மீது தொடுக்கப்படுகிற உளவியல் தாக்குதல்.

இதில் வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால் தி.மு.க. ஆதரவாளர்கள் பலரும் தங்களது சில ஆதங்கங்களை. விமர்சனங்களை பொது வெளியில் கொட்டித் தீர்க்கிறார்கள். அவை எதிரிகளுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தருகின்றன. தி.மு.க. தலைவர் எல்லாவற்றையும் தன்னிடம் கூறும்படி திரும்பத் திரும்ப அழைப்பு விடுக்கிறார். அதற்கான இணைய தளத்தையும் அளித்திருக்கிறார்.

ஆனால் கட்சி ஒரு நெருக்கடியான காலத்தில் இருக்கும்போது கட்சிக்கு ஆலோசனை வழங்குகிறோம் என்ற பெயரில் பொதுவெளியில் குற்றச்சாட்டுகளை பதிவு செய்வது எந்த வகையிலும் கட்சிக்கு உதவாது. எதிரிகளுக்குத்தான் உதவும். தலைவரின் கரங்களை வலிமைப்படுத்தி இயக்கத்தை சீர்படுத்த வேண்டிய நேரத்தில் நமது ஆதரவாளர்கள் சிலர் செய்யும் காரியங்கள் வருத்தம் அளிக்கின்றன.

**இன்ஸ்டாகிராமால்தான் த.வெ.க. வென்றதா?**

த.வெ.க இன்ஸ்டாகிராமால்தான் வென்றதாகக் கூறப்படுகிறது. அது ஒரு பகுதி உண்மை. இன்னும் சில உண்மைகளும் இருக்கின்றன. த.வெ.க.வின் இணைய செயல்பாடுகளை தி.மு.க.வின் இணைய தள செயல்பாடுகளை முற்றாக நிராகரிக்கும் வேலையை சிலர் செய்து வருகிறார்கள். தி.மு.க.வின்மீது 2ஜி பொய்க் குற்றச்சாட்டைக் கூறி ஒட்டுமொத்த ஊடகங்களும் நமக்கு எதிரான பொய்களை கட்டமைத்தபோது அதை உடைத்தது. தி.மு.க.வின் இணையதள செயல்பாடுகள்தான். 2016., 2019, 2021, 2024, 2026 ஆண்டுகளில் சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் தி.மு.க. இணையத்தில் மேற்கொண்ட பல்வேறு தீவிர செயல்பாடுகள் கழகத்தின் வெற்றிக்கு பெரும் பங்காற்றின. பா.ஜ.க. ஆதரவு ஊடகங்கள் நம்மீது தொடுத்த அத்தனை தாக்குதல்களையும் தி.மு.க.வின் இணைய தள செயல்பாடுகள் எதிர்கொண்டு முறியடித்தன என்பது கண் முன் நிகழ்ந்த வரலாறு.

ஆனால் தி.மு.க. ஏதோ இணைய தள செயல்பாடுகளில் தோற்றுவிட்டது என்பது போன்ற ஒரு கட்டுக்கதையை எதிரிகள் திட்டமிட்டு பரப்பிவருகின்றனர். இது மிகப்பெரிய புரட்டு. கழகத்தின் வலிமை வாய்ந்த இணைய செயல்பாடுகள உளவியல் ரீதியாக சீர்குலைக்கும் முயற்சி.

**அப்படியெனில் த.வெ.க இணையத்தைப் பயன்படுத்தி எப்படி வென்றது?**

நான் ஒரு நீண்ட நாள் இணைய செயல்பாட்டாளன் என்ற முறையில் கூறுகிறேன், இது இன்ஸ்டாவினால் மட்டுமே பெற்ற வெற்றி அல்ல. மக்களிடம் இன்ஸ்டாவைவிடவும் நேரடியாக தொடர்புகொள்ளக்கூடிய ஊடகம் வாட்ஸப். த.வெ.க. பொய்ச்செய்திகளைப் பரப்புவதற்காக பல்லாயிரக்கணக்கான வாட்ஸப் குழுக்கள் பயன்படுத்தப்பட்டன. எந்த ஒரு கட்சியும் குறுகிய காலத்தில் இவ்வளவு பெரிய வாட்ஸப் கட்டமைப்பை உருவாக்க முடியாது.

பா.ஜ.க. 2014 ல் ஆட்சிக்கு வந்ததுமுதல் மைய நீரோட்ட ஊடகங்களை கட்டுப்படுத்தியது மட்டுமல்ல, பெரும் முதலீட்டில் சமூக ஊடக செயல்பாடுகளை மேற்கொண்டது. இலட்சக்கணக்கான வாட்ஸ்ப் குழுக்கள் நாடு முழுவதும் உருவாக்கப்பட்டன. பா.ஜ.க.வின் இந்த 'டிஜிட்டல் ஆர்மி' நேரடியாக கட்சி அடையாளத்துடன் செயல்படவில்லை. பல்வேறு விதமான போலி முகமூடிகளுடன் அவர்கள் இடையறாது பொய்த்தகவல்கள் பரப்பினார்கள். சமூக வலை தளங்களில் தங்கள் அரசியல் எதிரிகளின்மேல் கடும் தனிநபர் தாக்குதல்களை மேற்கொண்டார்கள். யூ ட்யூப், ஃபேஸ்புக், ட்விட்டர், இன்ஸ்டா எல்லாவற்றிலும் தங்கள் கூலிப் படையினரை அமர்த்தினார்கள்.

**பா.ஜ.க.வின் இந்த டிஜிட்டல் கட்டமைப்பு அப்படியே த.வெ.க.விற்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்ற சந்தேகம் பலருக்கும் ஏற்பட்டிருக்கிறது. பா.ஜ.க. திராவிட கட்சிகளை அழிக்க பெற்றெடுத்த குழந்தைதான் த,வெ,க. என்பதை அறிய எந்த பரிசோதனையும் தேவையில்லை. தமிழ்நாட்டில் பா.ஜ.க.வின் 'டிஜிட்டல் ஆர்மி' யால் நேரடியாக வெல்ல முடியாததற்குக் காரணம் இங்கு நிலவும் கடும் பா.ஜ.க. எதிர்ப்பு மனநிலைதான். ஆகவே விஜய் என்கிற பிரபலமான சினிமா பொது பிம்பத்திற்கு தங்களுடைய வழிமுறைகளையும் கட்டமைப்பும் தந்து உதவியிருக்கிறார்கள்என்பதற்கு ஆதாரம் த.வெ.க.வின் முக்கிய நிர்வாகிகள் பா.ஜ.க.வால் அனுப்பப்பட்டவர்கள் என்பதிலிருந்தே அறியலாம்.**

த.வெ.க பரப்பிய பொய்த் தகவல்களை the hindu நாளிதழ் அம்பலப்படுத்தியிருக்கிறது. கரூர் சம்பவத்தையே மடைமாற்றிய பிறகு இணையத்தைப் பயன்படுத்தி எதையும் செய்யலாம் என்கிற தன்னம்பிக்கை த.வெ.கவிற்கு ஏற்றப்பட்டிருக்கிறது. அதுதான் அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகும் அன்றாடம் பரப்பிக்கொண்டிருக்கும் பொய்ப்பரப்புரைகள்.

இந்தப் பொய்களுக்கு பெரிதும் உறுதுணையாக பல காட்சி ஊடகங்களும் நடுநிலை போர்வையில் செயல்படும் த,வெ.க. காண்ட்ராக்ட் ஊழியர்களும் இருப்பதைக் காணமுடிகிறது. அவர்கள் எல்லாவற்றையும் விஜய்யை சுற்றியே கட்டமைக்கிறார்கள். எரிபொருள் பிரச்சினையால் நாடு பொது முடக்கத்தை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது அதைப்பற்றி எந்த விவாதமும் இல்லை.

**சினிமா மோகம், இன்ஸ்டா, தொலைக்காட்சி, பிரமாண்டமான வாட்ஸப் கட்டமைப்பு என பலவற்றின் கூட்டிணைவே த.வெ.க. பின்னிய இந்த மாயவலை. தி.மு.க. போன்ற ஒரு கட்சி தர்க்கரீதியாகவும் தரவுகளோடும் செயல்பாடுகளின் அடிப்படையிலும்தான் தன் வழிமுறைகளை மேற்கொள்ள முடியும். மக்களிடம் உரையாட முடியும். சமூக வலை தளங்களில் நாம் தொழில்நுட்ப ரீதியாக இன்னும் வலுவாக செயல்படவேண்டும் என்பது உண்மைதான். ஆனால் த.வெ.க.வின் ஏமாற்று வழிமுறைகள் எதையும் நாம் பின்பற்ற முடியாது. பின்பற்றக் கூடாது. நாம் நமக்கான நம் கொள்கை வழிப்பட்ட செயல்களை ஊடகங்களில் முன்னெடுக்க வேண்டும். த.வெ.க.வின் வெற்றியை, அதன் இணைய செயல்பாடுகளின் மூர்க்கத்தைக் கண்டு நாம் பதற்றமடையக்கூடாது. இது ஒரு விபத்து, தற்காலிக சூழல்.**

தி.மு.க. 75 ஆண்டுகளாக இத்தனை வலிமையுடன் நீடித்திருப்பது அதன் கொள்கையாலும் செயல் திறனாலும் மக்கள் தொண்டினாலுமே. தி.மு.க. தொடங்கப்பட்ட காலத்திலிருந்து திரைப்படம், பத்திரிகைகள், மேடை நாடகங்கள், சொற்பொழிவுகள், புத்தகங்கள், இணையம் என எல்லா ஊடகங்களையும் திறம்பட பயன்படுத்தி வளர்ந்த இயக்கம். வெறும் இன்ஸ்டாகிராமிடம் நாம் தோற்றுவிட்டோம் என்று நம்மை நம்பவைக்க முயற்சிக்கிறார்கள். மாய பிம்பங்கள், பொய் தோற்றங்கள் நெடுநேரம் நீடித்திருக்காது.

**நாம் சமூக வலைதளங்களை இன்னும் திறம்பட பயன்படுத்துவோம். அதைவிட உண்மையான நமக்கு பழக்கமான பணி ஒன்றிருக்கிறது. அது நெருக்கடியான காலத்தில் மக்களுக்கு தொண்டாற்றுவது. மிக மோசமான நாட்கள் வர இருக்கின்றன. மக்களோடு இருந்து பணியாற்றுவோம். அவர்களின் இதயங்களை வெல்வோம்.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**கொண்டயம்பள்ளி க. இராமசாமி**
**மே 22 (1991)**



**இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டச் செயலாளராக கழகப் பணியாற்ற தொடங்கி, தலைவாசல் ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர் என கழகத்தில் பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**ஆத்தூர் வட்ட கூட்டுறவு ஒன்றிய தலைவராகவும் – வீரகனூர் வீடுகட்டும் சங்கத் தலைவராகவும் பொறுப்பு வகித்தவர்.**

**1964ல் நடைபெற்ற இந்தி சட்டஎரிப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் அனுபவித்ததுடன், மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.**

**ராஜிவ்காந்தி படுகொலை செய்யப்பட்டபோது ஏற்பட்ட கலவரத்தில் எதிர்க் கட்சியினரால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

'நீட்' தேர்வை முற்றாக ரத்து செய்யக் கோரி

# திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

## புதுச்சேரி தி.மு.க. அமைப்பாளர் இரா.சிவா பங்கேற்பு!

*புதுச்சேரி, மே 22 -*

இந்தியா முழுவதும் நீட் தேர்வை முற்றாக ரத்து செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி புதுச்சேரி மாநில திராவிடர் கழகம் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நேற்று முன்தினம் மாலை 5.00 மணி அளவில் அண்ணா சிலை அருகில் நடைபெற்றது.

திராவிடர் கழக மாநில தலைவர் சிவ.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் அன்பரசன் வரவேற்றார். பகுத்தறிவாளர் கழக அமைப்பாளர் இரஞ்சித்குமார், திராவிடர் கழக மாவட்டக் காப்பாளர்கள் சடகோபன், இராசு, பொதுக் குழு உறுப்பினர்கள் விலாசினி இராசு, அறிவழகன், பழநி, மாவட்டச் செயலாளர் இராசா, மாவட்டத் தலைவர் குப்புசாமி, இளைஞர் அணிச் செயலாளர் பிரபஞ்சன், மாணவர் கழகத் தலைவர் அறிவுச்செல்வன், சபீர் முகமது ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திராவிடர் கழக பொதுச் செயலாளர் துரை, சந்திரசேகரன் தொடக்கவுரை ஆற்ற, முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர், தி.மு.க. மாநில அமைப்பாளர் இரா. சிவா கண்டன உரை ஆற்றினார்.

தொடர்ந்து, தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் வே. கார்த்திகேயன், விக்னேஷ் கண்ணன், இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் சலீம், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாநிலச் செயலாளர் இராமசந்திரன், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி முதன்மைச் செயலாளர் அரிமாத்தமிழன், மதிமுக அமைப்பாளர் ஹேமா. பாண்டுரங்கன், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலச் செயலாளர் முகமது உமர் பாரூக், எஸ்டிபிஐ மாநிலத் தலைவர் அப்துல்லா ஆகியோர் உரையாற்றினார்கள்.

இதில், தி.மு.க. மாநில துணை அமைப்பாளர் தைரியநாதன், பொதுக் குழு உறுப்பினர்கள் தங்கவேலு, வேலன், அமுதாகுமார், தொகுதி செயலாளர்கள் சக்திவேல், நடராஜன், மாணவர் அணி அமைப்பாளர் மணிமாறன், மகளிர் அணி அமைப்பாளர் காயத்ரி, வழக்கறிஞர் அணி அமைப்பாளர் பரிமளம், சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் முகிலன், நிர்வாகிகள் குரு, அன்பழகன், தர்மராஜன், கண்ணதாசன், அருண், ராமு, முருகன், பாலபாரதி மற்றும் கூட்டணி கட்சித் தலைவர் உரையாற்றினார்கள்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் இந்தியா முழுவதும் நீட் தேர்வை முற்றாக ரத்து செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பினர்.

ஈரோடு தெற்கு, சூரம்பட்டி பகுதி கழகச் செயலாளர்

# வில்லரசம்பட்டி ஏ.முருகேசன் தாயார் ஏ.பொன்னம்மாள் மறைவு!

## சு.முத்துசாமி - கழகத்தினர் அஞ்சலி!



*ஈரோடு, மே 22-*

ஈரோடு தெற்கு மாவட்டம் மாநகரம், சூரம்பட்டி பகுதி கழக செயலாளர் வில்லரசம்பட்டி ஏ.முருகேசன் அவர்களின் தாயார் ஏ.பொன்னம்மாள் வயது மூப்பின் காரணமாக 20.5 .2026 புதன்கிழமை அன்று மதியம் 2:30 மணி அளவில் காலமானார் என்கிற செய்தியை அறிவிக்க வருந்துகிறோம். மறைவு செய்தி அறிந்த ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான சு.முத்துசாமி நேரில் சென்று அன்னாரின் உடலுக்கு மலர்மாலை வைத்து அஞ்சலி செலுத்திவிட்டு அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

மேலும் மறைவு செய்தி அறிந்த மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வார்டு கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள் அன்னாரின் உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினார்கள் அன்னாரின் இறுதிச்சடங்கு நேற்று (21.5.2026- வியாழக் கிழமை காலை 7 மணியளவில் வில்லரசம்பட்டி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.



உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் மு.ஜெயக்குமார் திருப்பூர் தெற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி தலைமையில் சூளேஸ்வரன்பட்டி பேரூர் கழக பகுதிகளில் தொகுதி மக்களைச் சந்தித்து நன்றி தெரிவித்தார். இதில் பேரூர் கழக செயலாளர் ஆறுச்சாமி, பேரூராட்சி தலைவர் வனிதா ஜெயபால் உள்பட மாவட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.